# சுடர்

மாத இதழ்

30

1 ஆகஸ்ட் '83

50 காசு




FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010



YOUR TRUSTED TRAVEL AGENT
For Fast and Friendly Service

**GANESH OVERSEAS TRAVEL & TOURS**

217, First Floor, Khaleel Shirazi Estate,
Pantheon Road, Egmore, Madras-600 008.

Cables : GANESHTOUR Tel : 810256


Your Reliable Tourist Car Operator
For Timeless Service

**ARURAJ CABS**

217, First Floor, Khaleel Shirazi Estate,
Pantheon Road, Egmore, Madras-600 008

Tel : 810256

**Your Safety Is Our Concern**



FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010



## இந்திரா வீட்டு மர்மங்கள்

| | | |
|---|---|---|
| உலோக கண்டுபிடிப்பு கதவு | ரூ | 56,000 |
| கையில் எடுத்துச் செல்லும் உலோக கண்டுபிடிப்பு கதவு | ரூ | 875 |
| அபாய அறிவிப்பு மணி | ரூ | 33,158 |
| கடித சோதனை கருவி | ரூ | 5050 |
| கடித எக்ஸ்ரே கருவி | ரூ | 1448 |
| கடித பிரதி எடுக்கும் கருவி | ரூ | 279 |

இந்திராவின் உத்தியோக சம்மந்தமில்லாத பிரயாண செலவு 75ம் ஆண்டு கணக்குப்படி இந்திய அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் ரூ 13, 76, 762.38 லட்சமாகும்.

அரசுக்கு இந்திரா காங்கிரஸ் தரவேண்டியது ரூ 11,48,749.08 லட்சமாகும்.

நன்றி: செங்கீர்

## சுட்டியார் பதில்!

சுட்டியாரே, நாம் வங்கியில் கடன் இருந்து கட்ட தாமதமானால் உடனே ஜப்தி செய்கிறார்கள். நடிகர் நடிகையர் வரி இலட்சக்கணக்காக பாக்கி இருந்தும் ஜப்தி செய்வதில்லையே ஏன்?

—R. ரவி, வேலூர்

நடைமுறையில் ஏழைக்கொரு சட்டம், பணக்காரனுக்கு ஒரு சட்டம் என்பது தானே வருத்தமான உண்மை.

"கற்றவர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு" இது உண்மையா?

—எஸ். மோகன், மே. மாம்பலம்

செல்லும் இடத்தையும், கற்ற விஷயத்தையும் பொருத்தது.

முதல்வரின் சத்துணவுத் திட்டத்தால் பயன் பெறுபவர்கள் யார்?

—T. M. செல்வராஜ், ப. க. பாளையம்

அதிகப் பயன் பெற்றவர் முதல்வர் தான்.

எதிர்கால இந்தியா எப்படியிருக்க விரும்புகிறீர்கள்?

—ஆர். எம். வடுகநாதன், வேதாரணியம்

நிகழ்கால இந்தியாவின் அத்தனை ஏற்றத்தாழ்வுகளும், அவலங்களும் நீங்கி, உலகுக்கு புதிய வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

அரசியல் மந்திகள் ஏன் அடிக்கடி கட்சி தாவுகின்றன?

—B. வெங்கடேஸ்வரன், அம்பத்தூர்.

மந்திகள் தாவத் தானே செய்யும்.

இந்தியா சோம்பேறிகளின் சொர்க்க பூமியாகவும், அரசியல் வாதிகளின் ஆதிக்க பூமியாகவும் இருப்பதற்குக் காரணம்?

—எஸ். திலகம், மருதூர்

சிந்தனையாளர்களின் மௌனமும், செயல்வீரர்களின் அலட்சியமும் தான்.

சாலை விபத்துக்களுக்கான முக்கிய காரணங்களில் திசை திருப்பும் கவர்ச்சி விளம்பர சுவரொட்டிகளும் ஒன்று. பெண்ணுரிமை இயக்கங்கள் ஊர்வலம் நடத்தி இந்த ஆபாசக் காகிதங்கள் மீது முட்டையும், சாணியும் அடித்தும் இன்றும் நிரந்தர தீர்வு வரவில்லையே. —சி. இரகுராமன்

## போஸ்டர்கள்

காசு செலவழிப் போரை மட்டுமே ஆபாச பத்திரிகைகளும், திரைப்படங்களும் சீரழித்து வருகின்றன. சாலையில் போவோர் வருவோரை யெல்லாம் கவ்வி இழுத்து மாசுபடுத்தி வருகின்றன சுவரொட்டிகள்.

ஆபாச சுவரொட்டிகளின் ஆக்கிரமிப்பு சென்னை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் கேட்பாரற்று உச்ச கட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது. சமீபத்தில் சென்னை நகரம் முழுவதும் ஒட்டப்பட்டிருந்த "பதினான்கு வயதினிலே" மலையாள திரைப்பட சுவரொட்டிகள் இளம் உள்ளங்களில் நஞ்சைக் கலக்கும் பொருட்டு ஆண் பெண் உடலுறவுகளைத் தத்ரூபமாக சித்தரித்துக் காட்டியிருந்தது சம்மந்தப்பட்ட படத்தில் "விஷயம்" இருக்கிறதோ இல்லையோ, திரைப்பட விநியோகஸ்தர்களுக்கு சுவரொட்டியில் போடுவதற்கு ஏற்ற நிர்வாணப் படங்களும், படு ஆபாச வழியும் மொழி பெயர்ப்பு தலைப்புகளும் கிடைத்து விடும் (எ.டு இன்பவெறி, மாமனாரின் இன்பவெறி, சிலுக்கின் இரவுகள்...) சமீபத்தில் ஒரு நிர்வாண மலையாளப் படத்தின் சுவரொட்டியில் பெண்ணின் மார்பகத்தின் மீதே "மாநகராட்சித் தணிக்கை குழு" என்று வேறு முத்திரை குத்தியிருக்கின்றார்கள். வெட்கக் கேடு.

"ஒரு பிரபல கவர்ச்சி நடிகையை மணந்து கொள்ள ஒரு வாய்ப்பு" இது ஓர் ஆபாச வார இதழின் போஸ்டர் வாசகம். பக்கத்திலே கவர்ச்சி நடிகையின் நிர்வாண பல கோணங்கள். இப்பத்திரிகை தனது வாசகர்களை எந்தத் தரத்தில் வைத்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு இது.

இத்தனை ஆபாச சுவரொட்டிகளையும் வெளியிட முழு அனுமதி அளித்து, உடந்தையாய் இருந்து விட்டு "ஆபாச சுவரொட்டிகள் ஒட்டுவதை பொது மக்கள் அனுமதிக்கக் கூடாது" என்று பொறுப்பை நம் தலையில் கட்டி விட்டு நைச்சியமாக ஓடும் அதிகார வர்க்கத்தின் அயோக்கியத் தனத்தை என்ன சொல்வது? ◄


FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

## சிலம்பு

அரசியல் பிழைத்தோர்க்கு
அறம் கூற்றாகும்...!
இளங்கோவே—
இதை கூறத்தானே
நீ—
சிலம்பை பாடினாய்...!
இன்று......இந்த
அரசியல் வாதிகளிடம்
'அறம்' என்ற
பேச்செடுத்தாலே
'சிலம்பை' சுழற்றுவார்கள்..!

—வலங்கை, தமிழ்வேந்தன்





## ஒப்பந்தங்கள்

கான்ட்ராக்ட்
பெற்றுக்
கட்டிடம் கட்டி
கணக்கு வழக்கில்
ஊழல்கள் செய்து
காசு பணத்தைக்
கணக்கின்றிச் சேர்த்தவர்.....
இறுதி உயிலில்
இப்படி
எழுதி வைத்தார்...
'எனது
கல்லறைகசு மட்டும்
தயவு செய்து
கான்ட்ராக்ட்
விட வேண்டாம்...'

—இரா. வேலுச்சாமி
(குருஷேத்ரா)

## கல்வி விலை ஏற்றம்

நாட்டில் 'கல்வி'யின் தரம்
உயர்ந்து விட்டது-ஆம்
தரம் மட்டுமா உயர்ந்தது
விலையும் தான்...
+2 விலை ஆயிரம்
பி.எஸ்.சி. பி.எட். மூவா
யிரம்
எம்.எஸ்.சி. ஐயாயிரம்
எம்.பி.பி.எஸ். பத்தாயிரம்
பி. குறிப்பு :-
இது வேலைக்கும்
சேர்த்து அல்ல.


—பாரதிப்ரியா

## ஒரு சந்தேகம்

அரைக்கிலோ
அவரை வாங்க
அரை மணி நேரம்
பேரம் பேசும்
நமது பெண்கள்
'குடும்பப் பத்திரிக்கை'
களை(!)
கணக்கில்லாமல்
வாங்கிக் குவிப்பதேன் ?

—சி. குப்பு





## இது என்ன செருப்புக்கடையா?

மராட்டிய காங்கிரஸ் கட்சி (இ) தலைவர் ஸ்மி அசிர் வாழும் ஆடம்பர வாழ்வின் ஒரு பகுதிக்கு அத்தாட்சி இப் படம். தனது பம்பாய் இல்லத்தில் மட்டும் வகை வகையான 21 ஜோடி ஆடம்பர காலணிகளை அடுக்கி வைத்திருக்கிறார். தனது சொந்த அகமத் நகர் வீட்டில் இன்றும் பல ஜோடி காலணிகளை நிரப்பியிருக்கிறாராம். அரசியல் வாதியாக வாழ்ந்தால் எப்படியெல்லாம் மிதமிஞ்சி உல்லாசமாக செலவழிக்கலாம் என்பதற்கு வரை முறையே இல்லையோ! இதில் ஒரு செருப்பின் விலை, ஓர் சராசரி இந்தியரின் மாத வருவாயை விட அதிகம் இருக்கலாம். கிழிந்த செருப்புக் கூட போட முடியாத கோடிக்கான மக்கள் பலர் இவர்களைத் தான் நம்பியிருக்கிறார்கள் பாவம்!

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

## நமது ரோஜா மருத்துவம்

முகர்ந்தாலேயே பலன் தரக் கூடியது ரோஜா மலர். வலி முகர்ந்தால் சளி போகும்; தலைவலி கட்டுப்படும். வலி அப்போதும் நிற்காவிடில் மலர்ச் சாற்றை மூக்கில் பிழிந்தால் தலைவலி பறந்தோடும்.

ரோஜா மொட்டுக்களை லேசாக வதக்கி, துவையல் செய்யுங்கள். சீதபேதிக்கு கைகண்ட மருந்து இது.

ரோஜாவை நிழலில் உலர்த்தி, கஷாயம் போட்டுச் சாப்பிடுவது வாய்ப்புண்ணை ஆற்றும்; கர்ப்பிணிகளுக்குச் சிறுநீர் தாராளமாகப் போகும்.

ரோஜா கஷாயத்தைக் காய்ச்சிய பசும்பாலில் கலந்து சாப்பிட்டால், குடல் கழிவுடன் பித்தநீர் வெளியாகும் உடல் கலகலப்பாக இருக்கும்.

ரோஜாவை மென்று தின்றாலே நிறைய பலனுண்டு; வயிறு சுத்தமாகும். சுரம் தணியும்; வாந்தியெடுக்க வரும் ஒக்காளம் நிற்கும்; தாகம் சாந்தியடையும்; ஆசன எரிச்சல் அடங்கும்.

ரோஜாப்பூ குல்கந்து கடைகளில் கிடைக்கும். தினம் காலை, மாலை இரு வேளை இதனைச் சுவைத்து வந்தால், உடலிலுள்ள உள் உறுப்புகள் அனைத்தும், "ஓவர் ஆல்" செய்த சைக்கிள் மாதிரி பலப்பட்டு இயங்கும். இயற்கை 'டானிக்'.

நாலைந்து மின்மினுப் பூச்சிகளைப் பிடியுங்கள்; அதனுடன் ரோஜாப் பூவைச் சேர்த்து நன்றாக அரைத்து எடுங்கள். அதை வடிக்கட்டி இளஞ்சூடாக காதில் விட்டால், உடனே காது உபாதை குறையும். விரைவில் குணமாகும். அடுத்து: "நமது மிளகாய் மருத்துவம்" —புஷ்பநாதன

---

சிலர் துண்டித்து விட வேண்டிய சூழலே ஏற்பட்டுள்ளது.

அரசு எந்த வசதி செய்தாலும், அதைத் தவறாக பயன்படுத்தி சீரழிக்கும் கூட்டம் இருக்கிறது. பணக்கார வியாபாரிகளே இம்மாதிரி ஈடுபடுவது மிகவும் அற்பத்தனமானதாகும்.

—நிலா

## தொலைபேசி திருடர்கள்

அண்டாகாகசம் அபூகாஹூகும்' இந்த குறிப்பு வார்த்தைகளை அலிபாபாவும் நாற்பது திருடர்களும் குகையை திறக்க பயன்படுத்தியதை நாம் அறிவோம். இன்று பகற் கொள்ளை அடிக்கும் வர்த்தகர்கள் பலர் பம்பாயிலிருந்து உற்பத்தியாகும் பொருட்கள் மார்க்கெட்டில் எப்படி விற்பனையாகின்றன என்பதை தொலை பேசி மூலம் தெரிந்து கொள்ள இதே வழியை சற்று நூதனமாக கையாண்டு வருகின்றனர்.

இந்த வர்த்தகர்கள் திரு. மஹங்கா பாய் அல்லது திரு. சாஸ்தாபாயிடம் தொலை பேச வேண்டும் என்று பதிவு செய்து கொள்வார்கள். திரு. மஹங்கா பாய் இல்லை என்றால் விற்பனை நன்றாக இல்லை என்று அர்த்தம். சாஸ்தாபாய் இல்லை என்றால் விற்பனை செழிக்கிறது என்று அர்த்தம். உண்மையில் மஹங்காபாய், சாஸ்தாபாய் என்ற நபர்களே இல்லை. எனவே (PP call முறையில்) 4 ரூபாய் செலவில் பம்பாயிலிருந்து இந்தியாவின் எப்பகுதியுடனும் தொடர்பு கொண்டு தங்களுக்குத் தேவையான தகவலை சாமர்த்தியமாகப் பெற்றுச் செல்கின்றனர். இந்த நரித்தனம் கொண்ட வணிகர்கள்.

இச் செய்தியை மத்திய செய்தித் தொடர்பு அமைச்சர் திரு. வி. என் கட்கில் சமீபத்தில் ஒப்புக் கொண்டுள்ளார். இன்னொரு மோசடி. எஸ். டி. டி. என்ற நேரடி சுழற்சி முறையில் சென்னையிலிருந்து பம்பாய்க்கு 1 நிமிடம் பேசினால் 30 சாதாரண தொலை பேசிக்குரிய கட்டணச் செலவாகும். சில வணிகர்கள், தொலை பேசி ஊழியர்களுக்கு மாமூல் சில்லறை வெட்டி விட்டு மணிக்கணக்கில் நீண்ட தூர நகரங்களுக்கிடையே கவலையின்றி பேசுகிறார்கள். இவர்கள் பேசும் போது யாரோ ஒரு அப்பாவி தொலை பேசிக் காரரின் மீட்டரில் காசு ஏறும்.

பல தொலை பேசிக் காரர்களுக்குச் சம்மந்தமில்லாமல் அதிக கட்டணம் வருவது இந்தத் தொலை பேசித் திருடர்களால் தான் என்று தெரிய வந்துள்ளது. இதற்காக பயந்து பணம் கட்டி, நேரடி சுழற்சி முறையே வேண்டாம் என

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

# சவக்கிடங்கில் சங்கடங்கள்

பிணம் பேசாது. ஆனால் சென்னை அரசு பொது மருத்துவ மனை பிணக்கிடங்கில் உள்ள பிணங்கள் ஆற்றாமையுடன் நம்மைப் பேச வைக்கின்றன.

அனாதைப் பிணங்கள், வறுமையினால் அடக்கம் செய்ய இயலாமல் உறவினரால் நிராகரிக்கப்பட்டவரின் பிணங்கள், விபத்தில் சிக்கி அல்லது கொலை செய்யப்பட்டு காவல் துறையினரின் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ள பிணங்களே இந்தப் பிணக்கிடங்கை நிரப்பியுள்ளன. பெரும்பாலும் இவை நிறம், உரு மாறியும், எலும்புகள் பற்கள் பயங்கரமாக வெளுத்தும், பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு சரியாக தைக்கப்படாத இடங்களிலிருந்து சதை வெளிவந்து அழுகிய நிலையிலும் அநேகமாக நிர்வாண நிலையிலுமே உள்ளன. ஒரு சில பிணங்களே பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலானவை தரையில்தான் கிடக்கின்றன.



இந்தப் பிணக்கிடங்கு பனிக் கட்டியின் வெப்ப நிலையான 0·C க்கும் கீழே வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் இப்படி குளிர்விக்கும் இயந்திரங்களில் ஒன்று பழுதாகி கடந்த 6 மாதங்களாக வேலையே செய்வதில்லை. மற்றொன்று மிகவும் பழுதடைந்த நிலையில் இழுத்துப் பறித்துக் கொண்டு அவ்வப்போது வேலை செய்கிறது. மேலும் அவ்வப்போது மணிக் கணக்கில் ஏற்படும் மின்தடையோ பாக்டீரியாக்களும், கிருமிகளும் வலுப்பெற சுதந்திரம் அளித்து வருகிறது.

சில பிணங்கள் 5 வருடங்கள் வரை இக்கிடங்கில் போடப்பட்டுள்ளன. தற்போது குன்றத்தூரில் கிணற்றில் விழுந்து இறந்தவரின் சடலம் இப்பிணககிடங்கில் 1 வருடமாக இருந்து 2—7—83 அன்று ஆண்டு விழா கொண்டாடி விட்டது. 6 மாதங்களுக்கு ஒரு முறை இந்தப் பிணக்கிடங்கிலிருக்கும் பிணங்களை அடக்கம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. அப்போது மொத்தமாக குப்பைத் தொட்டியில் குப்பையைக் கொட்டுவது போல இவையும் மொத்தமாக பூமியில் கொட்டப்படும்.

இந்நிலைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. பிரேத பரிசோதனை முடிந்து பிணக்கிடங்கிற்குச் சடலத்தை அனுப்பி பல மாதங்கள் ஆகியும் போலீசார் பரிசோதனை அறிக்கையைக் கேட்டுப் பெறுவதில்லை. அதேபோல வழக்கு முடிந்த பின்பும் பிணங்களைப் புதைத்து விட ஆவன செய்வதில்லை. இந்த வேலை ஒப்படைக்கப்பட்டுள்ள போலீஸ்காரரே பிணத்தைப் புதைக்க கார்பரேஷன் ஆட்களுக்கும் மற்றவர்களுக்கும் செலவழிக்க வேண்டியுள்ளது. இப்படி செலவழித்த தொகையை நிர்வாகத்தினருக்கு எழுதிப் பெறுவதற்கு அதிக கால தாமதம் ஆவதால் அவரும் பிணத்தைப் புதைக்க கால தாமதம் செய்கிறார்.

இது மட்டுமன்றி 1664ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து எல்லாத் துறைகளிலும் வசதிகளும் விரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த மருத்துவமனையின் பிணக்கிடங்கு மட்டும் விரிவுபடுத்தப்படவேயில்லை. புற்றுநோய் சிகிச்சைக்குக் கதிர்வீச்சு மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவோருக்கும் மேக நோய்க்குச் சிகிச்சை அளிப்போருக்கும் நோய் பரவும் அபாயத்திலிருந்து காக்க அளிக்கப்படும் சலுகைகள் இந்தக் குற்றவியல் பிரிவு மருத்துவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.

இந்தப் பிணங்களிலிருந்து வெளிவரும் நுண்கிருமிகள் நோய்த்தடுப்பு மருந்துகளை செயலிழக்கச் செய்யக் கூடியவை. இவை இங்குள்ள ஊழியர்களையும் தாக்குகின்றன. கடந்த ஆண்டு பக்கிரி என்னும் ஊழியர் ஒருவர் காசநோயால் பீடிக்கப்பட்டு இறந்தார். இங்குள்ள ஊழியர்கள் மருத்துவ மனையின் வேறு எந்தத் துறைக்கும் மாற்றப்படுவதில்லை. ஏனெனில் இங்கு பணி புரிய யாருமே விரும்புவதில்லை. ►

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

சிறு கதை

# "ரெஸ்பான்ஸிபிள் பர்ஸன்"

அந்த லாட்ஜின் 26-ம் நம்பர் அறையின் வாயிலில் காத்துக் கிடந்தான் சத்யன். மாலை ஆறு மணி போலப் புறப்பட்டு வந்திருந்தான். மணி இப்பொழுது ஒன்பதைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது.

தொகுதி எம்.எல்.ஏ., அந்த ஊருக்கு வந்தால் இங்குதான் தங்குவது வழக்கம். மறு நாள் காலையில் சென்னை புறப்பட இருந்த அவர், விசிட்டர்கள் எல்லோரையும் அவசர



அவசரமாகக் கழித்து அனுப்பிக்கொண்டிருந்தார். போதாக்குறைக்கு கட்சிக்காரர்கள் வேறு அடிக்கடி வந்த வண்ணமிருந்தனர் அப்போழுது—

யாரும் எதிர்பாரா வண்ணம் ஐந்தாறு பேர் சேர்ந்து மிகப் பெரிய ரோஜா மாலையோடு உள்ளே நுழைந்தனர் மிகுந்த மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக் கொண்ட அவர், அவர்களின் கோரிக்கையை வினவினார். பெரிய ஏற்பாடோடு தயாராய் இருந்த அவர்கள், வெகு நாசுக்காக வந்த காரியத்தை விளக்கினார்கள்.

சில ஒப்பந்தங்களோடு ஒப்புதலும் கிடைத்தது. சிறிது நேரத்தில்,

"தம்பி, என்ன வேணும் உங்களுக்கு?" அறையினுள்ளிருந்து வந்த ஒருவர் கேட்டார்.

"ஒரு சர்டிபிகேட்..." இழுத்தவாறே தயங்கினான் சத்யன்.

உள்ளே செல்லும்படி கையைக் காட்டினார் அவர், சீக்கிரம் இடத்தைக் காலி பண்ணுய்யா என்பது போல் இருந்தது அது. அறையினுள் நுழைந்தான் சத்யன்.

"வா தம்பி! என்ன, வீட்டிலே அம்மா, எல்லோரும் சௌக்கியமா? என்ன விஷயமா வந்தே?" எம்.எல்.ஏ வினவினார்.

"ஒண்ணுமில்லிங்க சர்விஸ் கமிஷன் பரீட்சை எழுதப் போறேன். அதுக்கு ஒரு காண்டக்ட் சர்டிபிகேட் வேணும்..."— தயங்கித் தயங்கிக் கூறினான் சத்யன்.

உடனே லெட்டர் பேடை எடுத்து சர்டிபிகேட்டை எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தார் எம்.எல்.ஏ. அதை வாங்கிக் கொண்ட சத்யன் அவரைப் பார்த்தவாறே நின்றான்.

"என்ன தம்பி, பணந்தானே? பத்து வாங்கறது வழக்கம். நீங்க அஞ்சு கொடுங்க போதும்!"

அவன் நீட்டிய அந்த ஐந்து ரூபாயையும் வாங்கித் திணித்துக் கொண்டார் அவர். வெளியே வந்தான் சத்யன்.

"யாருன்னு நினைக்கிறீங்க, நம்ம தியாகி பொன்னம்பலமில்லே? அதுதான் இந்தக் கள்ளுக் கடை மறியல்லேயெல்லாம் ஜெயிலுக்குப் போனாரே, அவர் மகன் தான் இந்தப் பையன். பாவம், இன்னிக்கு இருக்கிற இடமே தெரியல்லே. அது பெரிய தியாகப் பரம்பரை"

கூடியிருந்தவர்களிடம் விளக்கமளித்தவாறே தயாராய் ஊற்றி வைக்கப் பட்டிருந்த மேல் நாட்டுச் சரக்கை கையில் எடுத்து உறிஞ்சினார் எம்.எல்.ஏ. கூடவே, "ஏ! கதவைச் சாத்தப்பா, 'கச்சேரி' ஆரம்பிச்சிடுச்சு, இனிமே யாரையும் உள்ளே அனுப்பாதே" என்று உதவியாளருக்கு உத்தரவு போட்டவர், திடீரென்று ஏற்பட்ட குஷியில் தோளில் போட்டிருந்த நீளத் துண்டை எடுத்து முண்டாசாகக் கட்டிக கொண்டார். பளீரென்று எல்லோரும் கெக்கலியிட்டு சிரிக்க மயக்கம் ஆரம்பமாகியது அங்கே.

வெளியே, அங்கு போடப் பட்டிருந்த ஒரு சோபாவில் அமர்ந்து அப்ளிகேஷனில் ரெஸ்பான்ஸிபிள் பர்ஸன் என்று குறிப்பிட்டிருந்த கட்டத்திற்கு நடுவே, அந்த எம். எல். ஏ யின் முகவரியை விதியே என்று நிரப்பிக் கொண்டிருந்தான் சத்யமூர்த்தி.

—கே. தீபன்

► இங்குள்ள ஊழியர்களுக்கும், இத்துறையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும் தற்காப்பு வசதிகூட செய்துதர முன்வராதவர்கள் பிணங்களை பாதுக்காப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?


—நிலா

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

# சில்லறை வியாபாரம்



என்றுமில்லாத அளவுக்கு நாடெங்கும் சில்லறை தட்டுப்பாடு தலை விரித்தாடுகிறது. தண்ணீர் பஞ்சத்தை வைத்துக் கூட மக்களிடம் வணிகம் நடத்தி ஒரு கூட்டம் பணம் சேர்த்தது போல, சில்லறை பஞ்சத்திலும் பல புது வியாபாரங்கள் செழித்துள்ளன.




ரிசர்வ் பாங்குகள் வாசலிலேயே கமிஷன் 5 முதல் 20 சதவீதம் வரை பெற்றுக் கொண்டு சில்லறை தரும் வியாபாரிகள் கடை விரித்திருக்கிறார்கள். "ரூ100 கொடுத்தால் ரூ85 தானே தருகிறீர்கள் நியாயமா" என்று கேட்டால் "நாங்களென்ன செய்ய! எங்களுக்கு சில்லறை தரும் நபர்களுக்கும் கமிஷன் தர வேண்டியிருக்கிறதே" என்கிறார்கள்.

சில்லறை தர முடியாத பம்பாய் ஓட்டல் காரர்கள் சிலர், சில்லறைக்குப் பதிலாக "டோக்கன்கள்" தருகிறார்கள். இந்த டோக்கன்கள் இந்த ஓட்டல் நிர்வாகத்தின் எல்லா கிளைகளிலும் செல்லுபடியாகும். காசுக்கு இப்படி டோக்கன் வழங்குவது சட்ட விரோதமானது என்றாலும், நிலைமையை சமாளிப்பதாகச் சொல்லி நிறைய தொகை 'பிசினஸ்' பண்ண ஓட்டல் காரர்களுக்கு இந்த உத்தி பயன் பட்டிருக்கிறது.

சில்லறைத் தட்டுப்பாடு ஏன்? சில்லறைகள் கோவில் உண்டியல்களில், வீடுகளின் சேமிப்பு டப்பாக்களில் நிறைய சிறை வைக்கப் பட்டது ஒரு காரணமாகச் சொல்லப் படுகிறது. சில்லறை அடிக்கும் 3 அச்சகங்களில் ஒன்றான ஹைதராபாத் அச்சகம் மூடப்பட்டதும் ஆசிய விளையாட்டுப் போட்டி மெடல்கள் அச்சடிக்க பம்பாய் அச்சகம் பயன்படுத்தப் பட்டதும், முக்கிய காரணமாகும். எதில் தான் இந்நாட்டில் தட்டுப்பாடு என்பது வரையறையில்லாமல் போய் விட்டதே — ஜே

## நாம் அறிய வேண்டியவர்கள்

# செரபண்டராஜு

நம் காலத்தில் நம் அண்டை தெலுங்கு மண்ணில் வாழ்ந்த மாபெரும் புரட்சிக்கவி செரபண்டராஜு.
இலட்சக்கணக்கான நசுக்கப்பட்ட மக்கள் மௌன நித்திரையில் இருந்து விழித்துக் கொள்ள இவரது நெருப்புக் கவிதைகள் காரணமாயின. ஸ்ரீ ஸ்ரீ பாணியை பின்பற்றி புரட்சிக் கவிதைகளை இயற்றி வரலாறு தனக்கிட்ட கட்டளையைச் செவ்வனே நிறைவேற்றினார்

1962 இல், பத்தம் பாஸ்கர ரெட்டி என்ற தன் இயற் பெயருடன் தெலுங்கு மொழியில் சாதாரணமான கவிதைகளை இயற்றத் தொடங்கினார். பிறகு முற்போக்குக் கவிஞரானார். திகம்பர கவிதையின் முன்னோடியும் இவரே. கடைசியாக புரட்சிக் கவிஞராக மாறினார். புரட்சி எழுத்தாளர் சங்கம் தோன்றக் காரணமாகவும் இருந்தார்.



முற்போக்குக் கவிதைகளை எழுத ஆரம்பித்தபொழுது செரபண்டராஜு என்ற புனைப் பெயர் ஏற்றார். கடைசி வரை செரபண்டராஜுவாகவே இருந்தார்.

"உண்டு கொழுத்த பரட்டைத் தலை பாபாக்களும், மாமன்னார்கள் போல உலாவரும் (ஜகத்குரு) சுவாமிகளும் தொழுநோய் பிடித்த இச்சமூகத்தின் மூல விக்கிரகங்கள்" என்ற கசப்பான உண்மைகளைப் பற்றிக் கணீரென முழக்கமிட்டார். அவரது சில வரிகள் :—

"என்னை ஏற்றுங்கள் கூண்டில்... மனிதன் மீது நம்பிக்கையிழந்த நீங்கள் கடவுள் மீது பிரமாணம் செய்யச் சொல்வது ஏன்"

"நீங்கள் அடக்கப்பட்டவர்களே தவிர அடிமைகள் அல்ல"

"ஆற்று நீரை ஏற்றம் இறைத்து ஆயிரம் புட்டி விளைவித்தாலும் கஞ்சித் தண்ணியில் பருக்கையைக் காணோம்."

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

இவருடைய கவிதைகள் வங்க மொழியில் "துவேதுவேதல்வார்" என்ற தலைப்பில் வெளியிடப் பட்டு உள்ளன.

"வந்தே மாதரம்" தலைப்பில் அவருடைய பாடல் :-

"ஓ எனதன்புத் தாய் நாடே! மாதா பிதா குரு தெய்வம் நீயே!
கொடுமைக் காரர் படுக்கையில் கொஞ்சுகின்ற பத்தினி நீ,
சர்வ தேசச் சந்தையிலே சர்வ அங்கங்களையும் அடகு வைத்த
அழகி நீ,
செல்வந்தர் கைகளில் மெய் மறந்து துயிலிருக்கும் வாலிபம் நீ,
துப்பினாலும் தூற்றினாலும் பதறாத மயக்கம் நீ,
அறுவடை வயல்களில் வளை வைக்கும் எலி, பெருச்சாளிகளைச்
சுமந்து நிற்கும் பாரதி நீ
வாய்க்கெட்டா வளங் கொழிக்கும் பசுமை நிறச் சீமை நீ
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!!"

ஆந்திர அரசு இவருக்காக சிறைக் கதவுகளைத் தாராளமாகத் திறந்தது. வேலையையிழந்தார். அரசு ஜோடித்த பொய் வழக்குகளையும், சதி வழக்குகளையும் சந்தித்தார்.

ஆந்திர அரசுக்கெதிராக அய்தராபாத் உயர் நீதி மன்றம் 20-9-71இல் "எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடியாது. கருத்து வேற்றுமைகளுக்காக யாரையும் ஜெயிலில் அடைக்க கூடாது" என்று தீர்ப்பளித்து இவருக்கு விடுதலையளித்தது.

ஆனால் நெருக்கடி நிலை பிரகடனம் காரணமாக இவர் மீண்டும் கைதானார். மீண்டும் பொய் வழக்குகள்-சதிவழக்குகள்-நாளும் பாதிக்கப்பட்ட வாழ்க்கையையே அனுபவித்தார். உடலும் உள்ளமும் நோகடிக்கப் பட்டாலும் நேர்மை குலையாது நிமிர்ந்து நின்றார்.

3 முறை மூளைக் கட்டி அறுவை சிகிச்சை செய்யப் பட்டது. கடைசி வரை பொய் வழக்குகளை ஜோடித்து வந்த அரசு, இவர் இறப்பது உறுதி என்றறிந்த பிறகு இவர் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுவதாகவும், இவரை மீண்டும் "தெலுங்கு பண்டிட்" வேலையில் அமர்த்துவதாகவும் கேவலமாக ஓர் அறிவிப்பு செய்தது. என்னே கருணை உள்ளம்!

இவர் தன் 38 வது வயதில் 1982-ஜூலை 2-ஆம் நாள் அய்தராபாத்தில் "காந்தி நோய் இல்லத்தில்" இயற்கை எய்தினார்.

இனி அவர் பாடல்கள் உயிர்த்தெழும்.

## நல்ல தூக்கம் இல்லையா?

ஒரு மனிதனுக்கு சராசரியாக சுமார் 7 மணி நேரம் உறக்கம் தேவை. வயது, உடல் வாகு இவற்றிற்கு ஏற்ப தூக்க அளவு கொஞ்சம் முன், பின் ஆக இருக்கலாம்; பரவாயில்லை.

இந்த உறக்கத்தைத் தவறான வழிகளில் சிலர் அடையப் பார்க்கிறார்கள். கள், சாராயம், விஸ்கி போன்ற போதைப் பொருட்களினால் தற்காலிகமாகப் பெறுவது மயக்கமேயன்றி உறக்கமல்ல. இவற்றால் உடலுக்கோ, உள்ளத்திற்கோ ஓய்வு கிடைப்பதில்லை. இன்னும் சிலர் தூக்க மாத்திரைகளை நாடுகிறார்கள். இதுவே பழக்கமாகிவிட்டால் இதய பலவீனமும், நரம்புத் தளர்ச்சியும், நாளடைவில் சாவும் ஏற்படக் கூடும்.

நல்ல தூக்கம் வர கீழ்க்கண்ட வழிகள் உதவும் :

1. ஒழுங்கான பழக்க வழக்கங்கள், சரியான உடல் உழைப்பு, எளியசத்துள்ள உணவுப் பழக்கம், அஞ்சாத, குழப்பமில்லாத மனம் உடையவர்களுக்குச் சொன்ன நேரத்தில் தூக்கம் வரும் போகும். இதுவே நல்ல தூக்கத்திற்குச் சரியான, நிலையான வழியாகும்.
2. படுக்கப் போகும் முன் வெது வெதுப்பான நீரில் குளித்துவிட்டு படுத்தால், இதமாக தூக்கம் வரும்.
3. இரவு நீண்ட தூரம் காலாற களைப்பு ஏற்படும் வரை உலாவி விட்டு வருவது தூக்கத்தை எளிதில் வரவழைக்கும்.
4. படுத்துக் கொண்டே 1, 2, 3 என்று எண்ணிக் கொண்டே போங்கள். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் எண்ண முடியாமல் தூக்கம் வந்து சேரும்.

**உறக்கம் வர சித்த மருத்துவம் :** சம அளவு வெற்றிலை, குப்பை மேனி இலை, வேப்பிலை சம அளவு, சாதம் வடித்த நீர்விட்டு அரைத்து, சுண்டைக்காய் அளவு உருட்டி 3 தினங்கள் வெயிலில் உலர்த்துக. உலர்ந்த பின் பட்டாணி அளவாகிவிடும் இதனை காலை, பகல், இரவு உணவு முடித்த பின் வேளைக்கு 3 மாத்திரைகள் வாயில் போட்டு தண்ணீர் குடித்து விழுங்குக, 10 தினங்கள் சாப்பிட்டால், பல நாள் தூக்கமில்லமை குணமாகும்.

—சுட்டிபாரதி

அடுத்து: "விஷத்தைக் குடித்து விட்டால்"

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

# "நியாயம் கேட்டேன்!" முதல் பரிசுக் கட்டுரை

காங்கயம் குடிநீர் விநியோகக் கட்டணம் இந்தியாவிலேயே எங்கும் வசூலிக்கப்படாத அளவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 16 ஆக வசூலிக்கப்பட்டது. இக்கட்டணத்தைக் குறைக்கக் கோரி, நான் 1976ம் ஆண்டிலிருந்து பல விண்ணப்பங்கள் அரசுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவித்திருந்தும், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. "மகஜர் கொடுத்தும் பயனில்லை, மன்றாடியும் பயனில்லை. மாறாக மக்களை ஒன்று திரட்டிப் போராடுவதன் மூலமே கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்பதை கடந்த கால வரலாறு நிரூபிக்கின்றது என்பதற்கொப்ப 1980ம் ஆண்டு குழாய் நீர் உபயோகிப்பாளர் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் அரசு அதிகாரிகளைச் சந்தித்து, கட்டணக குறைப்பிற்கு பாடுபட்டேன்.

சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே அரசு அதிகாரிகள் சிறிது இறங்கி வந்தார்கள். இருப்பினும் உரிய உத்திரவுகள் எளிதாகக் கிடைக்கவில்லை. உண்ணாவிரதப் போராட்டம் தர்ணாப் போராட்டம் ஆகியவைகளை நடத்தி, ஒவ்வொரு கட்டமாக காங்கயம் பஞ்சாயத்து, குடிநீர் வாரியம், ஆகியவைகளிடமிருந்து . கட்டணக் குறிப்பு அங்கீகாரம் பெற்றேன். முதல் கட்டணமாக வரிகொடா இயக்கமும் நடத்தினோம்.

இறுதியாக 15-12-81க்குள் கட்டணக் குறைப்பு வழங்கப்பட வேண்டும். இல்லேயேல் 16-12-81ம் தேதி சென்னை கோட்டை முன்பு "தீக் குளிப்பேன்" எனப் போராட்டம் அறிவித்தேன். அதன் பின்னரே அரசு சற்று இறங்கியது. இந்த அறிவிப்பு வெளியான பின்னரே குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் 9-12-81ம் தேதி குடிநீர் கட்டணத்தை ரூ16-லிருந்து ரூ9/-ஆக குறைத்து உத்திரவுகளை வெளியிட்டது. மேற்படி உத்திரவிற்கு, ஏற்கனவே அரசு வெளியிட்ட உத்திரவான ரூ16/-க்கு மாற்று அரசு ஆணை வெளியிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசிற்கு அனுப்பப்பட்டது.

மீண்டும் தொடர்ந்து தமிழ்நாடு அரசிற்கு பல முறை சென்னை சென்றும், கடிதங்கள் வாயிலாகவும் தொடர்பு கொண்டேன். அயராது போராட்டங்கள் நடத்தி, இறுதியாக அரசிடமிருந்து 18-2-83ம் தேதி தண்ணீர் கட்டணத்தை ரூ9/-ஆக குறைத்து எங்களுக்கு உத்திரவுகள் வந்தது.

**தமிழக அரசிடமிருந்து வந்த உத்திரவு நகல்.**

RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRATION
DEPARTMENT, FORT ST. GEORGE, MADRAS-9.

Letter No: 132369/WB. 11/81-2. Dated: 18-2-83

From
Thiru Keshav N. Desiraju, I.A.S.,
Under Secretary to Government.

To
Thiru K. V Namasivayam,
Secretary,
Water Consumer's Association,
Kangayam, Periyar District.

Sir,

Sub: Water Supply Scheme-Periyar Dist,-Kangayam Town Panchyat-Reduction of Water Charges-Reg.

I am dirceted to state that orders have been issued permitting the reduction of the water charge from Rs. 15/- to Rs. 9/- p. m. in the Kangayam Town Panchyat from 1-4-83.

Yours faithfully,
Keshav. N. Desiraju,
Under Secreta.y to Goverament.
/True copy/

காங்கயம் நகர பொது மக்களுக்காக அரசுடனும், அரசு அதிகாரிகளுடனும் போராடி கட்டணக் குறைப்பு பெற்று வெற்றியும் அடைந்து விட்டேன். இந்த நிகழ்ச்சி என்து வாழ்நாளில் மிகவும் மறக்க முடியாத ஒனறு. இந்தக் கட்டணக் குறைப்பு நிகழ்ச்சிக்காக நான் அரசிற்கு அனுப்பிய தந்திகள் 145ம், 300க்கும் மேற்பட்ட கடிதங்களும் ஆகும்.

**"நியாயம் கேட்டேன்"** அனுபவக் கட்டுரைப் போட்டி முடிவுகள்:

முதல் பரிசு: ரூ. 100 திரு கே. வீ. நமச்சிவாயம், காங்கேயம்
இரண்டாம் பரிசு: ரூ. 50 டாக்டர். வீ. இரா. பக்தவச்சலம், தஞ்சாவூர்.

தேர்தெடுக்கப்பட்ட பிற கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

## "ரங்கா டைப் பௌண்ட்ரி"

- ☐ போஸ்டர் அச்செழுத்துக்கள்.
- ☐ எல்லா வித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்.
- ☐ அச்சக உபகரணங்கள்.
- ☐ புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்.

அலுவலகம்: 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
தொழிலகம்: 38, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7.
தொலை பேசி: 37999, 664293

**சுட்டியில் மலிவு-வரி விளம்பரம்:** சுட்டியில் 3 வரிகளுக்குள் (சுமார் 15 வார்த்தைகள்) அடங்குமாறு உங்கள் செய்தியை வெளியிடுவதற்குக் கட்டணம் ரூ. 15/- மேற்கொண்டு வரியொன்றிற்கு ரூ. 5/- மட்டுமே.

மாவட்ட தலைநகர்களில் உள்ள B.A. படித்தவர்களுக்கு சொந்த ஊரிலேயே வேலை வாய்ப்புகள் தருகிறோம். விபரமறிய: சித்ரா கேசட் சர்விஸ், எல்லையம்மன் கோவில் தெரு, தஞ்சாவூர்.

சுய வேலை வாய்ப்பு பெற காலண்டர் ஏஜென்சி. மூலதனமற்ற வருவாய். உழைத்தால் மாதம் ரூ 1000 வரை சம்பாதிக்கலாம்: மகேஷ் பிக்ஷர் பாலஸ், அஞ்சற்பெட்டி எண்: 99, சிவகாசி-626123.

இத்தனையும் நாங்கள் செய்வதற்கு எங்களுக்கு ஆளும் கட்சி அரசியல் வாதிகள் கொடுத்த இன்னல்கள் கணக்கில் அடங்கா. அது தவிர தங்கள் பெயரையும் பரை சாற்றி கொண்டுள்ளார்கள். இந்த நிகழ்ச்சி சுட்டி வாசகர்களுக்கு ஓர் நல்ல அனுபவமாக அமையும்.

இத்துடன் எங்களின் முழுமையான போராட்ட நடவடிக்கைகள் அடங்கிய தபால்களும், அரசு எனக்கு அனுப்பிய அரசு உத்திரவின் நகல்களும், தங்களின் பார்வைக்காக அனுப்பப்பட்டுள்ளது.



ரிச்சர்ட் ஆட்டன்பரோவிற்கு முன்பே காந்தி திரைப் படத்தைத் தயாரிக்க இலண்டனிலிருந்து மார்க் ராப்சன் முயன்றிருக்கிறார். இதில் காந்திஜியாக நடித்தவர் "காஷ்யப்" என்ற இந்திய நடிகர். காந்தி போன்ற முகச் சாயலுடையவர். 1962இல் நடிகர் சிவாஜி கணேசன் லண்டன் சென்றிருந்த போது இந்த நடிகரை சந்தித்துப் பேசி விவாதித்திருக்கிறார். இப்படத்தின் தயாரிப்பாளர் ராப்சன், சிவாஜிக்கு முதல் 1000 அடிகளைப் போட்டுக் காண்பித்து "இப்படத்தை உங்கள் நாட்டவர் வரவேற்பார்களா" என்று கேட்ட போது சிவாஜி, "படம் உண்மையான வரலாற்றை சித்தரிப்பதாக இருந்தால் நிச்சயம் வரவேற்பார்கள். அப்படி இல்லாமல் தவறாக இருக்குமானால் படத்தை ஒதுக்கியே விடுவார்கள்" என்று பதிலளித்திருக்கிறார். இப்படம் தொடர்ந்து எடுக்கப்பட்டு வெளி வரவே இல்லை!

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010




தெரு நாய்களின் தொல்லை கேள்வி கேட்பாரின்றிப் போய் விட்டது. வீதிகளில் நடந்து செல்லும் போது நாய்களுக்குப் பயந்து நடுங்க வேண்டிய நிலை மிகவும் மோசமானதாகும். இந்த நாட்டில் எவ்வளவு விஷயங்களுக்குத் தான் பயப்படுவது? பாதுகாப்பு கேட்பது?

வளர்ப்புப் பிராணிகளில் நாய், எஜமான விசுவாசமுள்ளதாக இருக்கலாம், ஆனால் அது மிகவும் அபாயகரமான மிருகம். உலகத்தில் இன்னும் சரியாக மருந்து கண்டு பிடிக்காத "ஹைடிரோ:போபியா" என்ற மரண நோய் வெறிநாய் கடியால் ஏற்படுவதாகும். சாதாரண நாய் கடித்தாலே, அது வெறிநாயாக இருக்குமோ என்னவோ என்ற பயம் ஏற்பட்டு, நாய் செத்ததா, உயிருடனிருக்கிறதா (வெறிநாய் மனிதனைக் கடித்தால் இறந்துவிடும்) என்று தேடிப்பார்த்தாக வேண்டிய நிலை-தொப்புளைச் சுற்றி 14 நாட்களுக்கு ஊசி போடடுக் கொள்ள வேண்டிய கஷ்டம்.

குடும்பக் கட்டுப்பாடு நமக்குத் தானே— நாய்களுக்கு இல்லையே! மிக வேகமாக அநாதைத் தெரு நாய்களின் ஜனத் தொகை பெருகி வருகிறது. உளுத்துப் போன நகராட்சிகளும், ஊராட்சிகளும் லஞ்சம் பிடுங்கித் தின்னவே நேரம் போதாத போது இதை எங்கே பார்க்கிறார்கள்?

சேர்ந்துப் போய் அழுகிக் கிடக்கும் குப்பைகளிலிருந்து உண்டாகும், கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை ஒழிக்கத் திறமை இல்லை என்றாலும் தேங்கிக் கிடக்கும் சாக்கடைகளில் உண்டாகும் கொசு போன்ற கண்ணுக்குத் தெரிகின்ற சிறிய பூச்சிகளைக் கொல்ல துப்பு இல்லா விட்டாலும் கண்ணுக்குத் தெரிகின்ற இத்தனை பெரிய உருவம் கொண்ட மிருகங்களை ஒழித்துக் கட்ட யோக்கியதை இல்லாதிருப்பது நகராட்சிக்கும், ஊராட்சிகளுக்கும் கேவலத்திலும் மகா கேவலம். இதைக் கூட செயல்படுத்த முடியாமல் இவர்கள் என்ன தான் 'கழட்டி'க் கொண்டிருக்கிறார்கள்?

—சுயராஜ்

அச்சுக்கலை வளருமுன்பே கி.மு59ல் ரோம் நகரில் தினசரி செய்திகள் கையால் எழுதப்பட்ட செய்தித்தாள்கள் நகரின் முக்கியப் பகுதிகளில் தொங்க விடப் பட்டிருக்கின்றன. இம்முறையில் பொது மக்கள் தொடர்பு என்றும் சிந்தனையை முதன்முதல் உலகுக்கு அளித்தவர்கள் ரோமானியர்களே.

ஆன்டிவெர்ப் நகருக்கும் வெனிஸ் நகருக்கும் இடையே 1621ம் ஆண்டு வர்த்தக செய்திகளை பரிமாறி வந்த வர்த்தக ஏடுதான் இன்றைய தினசரியின் முன்னோடியாகக் கருதப்படுகிறது.

# வரலாற்றில் பத்திரிகைகள்

உலகிலேயே அதிகாரப் பூர்வமாக அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை பத்திரிகைகளுக்குக் கிடைத்தது 1735ல் தான். நியூயார்க் வாரப் பத்திரிகையின் வெளியீட்டாளரான ஜான் பீட்டர் சென்ஜர் என்பவர் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டு கைது செய்யப்பட்டதே இவ்வுரிமை கிடைக்க வழிகோலியது.

சட்ட ரீதியாக பத்திரிகை சுதந்திரத்தை அளித்த முதல் நாடு ஸ்வீடன் தான். 1766ம் ஆண்டு இச்சுதந்திரம் அளிக்கப்பட்டது.

1848ல் சுவிட்சர்லாந்தும் 1849ல் டென்மார்க்கும் தமது அரசியல் சட்டத்திலேயே பத்திரிகை தணிக்கை முறையை அழிக்கும் ஷரத்துக்களைக் கொண்டு வந்தன.

ஆஸ்தான கவிஞர், அரசு நர்த்தகி இவர்களைப் போல அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆன்ட்ரூ ஜாக்ஸன் என்பவர் தமது ஆட்சிக்காலத்தில் 60 முழு நேர அரசு ஊதியம் பெறும் பத்திரிகையாளர்களை வைத்திருந்தார்.

19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட போர்களின் விளைவாக தினசரிகளுக்கு செய்தி சேகரித்துத் தரும் நிருபர்களின் முக்கியத்துவம் அதிகரித்தது. வில்லியம் ஹோவர்டு ரஸ்ஸல் என்பவர் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் போரின் அவலங்களை எடுத்தியம்பியதே பிளாரன்ஸ் நைட்டிங்கேலை மாபெரும் சமூகப் பணிக்கு அழைத்தது.

—விலா

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

## பெண் கைதிகள்



சீலாபார்ஸ் (Sheela Barse) என்ற பெண் பத்திரிகையாளர் பம்பாய் மத்திய சிறையில் 15 பெண் கைதிகளை 1982 மே மாதம் பேட்டி கண்டார். அவர்கள் போலீஸ் காவலில் கொடுமைப்படுத்தப்பட்டதாக விவரித்தனர். இதனை அவர் கடிதம் மூலம் தலைமை நீதிமன்றத்திற்கு [சுப்ரீம் கோர்ட்] தெரிவித்தார். கடிதம் ரிட்மனுவாக ஏற்கப்பட்டது. கல்லூரி முதல்வரான டாக்டர் செல்வி. தேசாய் என்பவரை நீதிமன்றம் விசாரித்து அறிக்கை தர நியமித்தது. அதன்படி விசாரணைசெய்யப்பட்டது.

மோகன் அஸ்வானி என்ற வக்கீல் இரு அயல் நாட்டு பெண் கைதிகளுக்காக வழக்கு நடத்தி வந்தார். அவர் வக்கீல் கட்டணத்திற்கென சொல்லி அவர்களது பொருட்களை அடமானமாகப் பாவிப்பதாக வாங்கியிருந்தார். பின்னர் அவற்றை அபகரித்துக்கொண்டார் என செல்வி தேசாய் தம் அறிக்கையில் சொல்லியுள்ளார். அந்த வக்கீல் மீது விசாரணை நடத்த மஹாராஷ்டிர பார் கவுன்சிலுக்கு அறிக்கையினை அனுப்பி வைக்க நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. அத்தீர்ப்பில் சொல்லப்பட்ட உயிரோட்டமுள்ள அம்சங்கள் சில:

1. நகரத்தின் நல்லப் பகுதியில் 4 அல்லது 5 காவல் நிலையங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அங்கு மட்டுமே பெண் கைதிகளை அடைக்கத் தனியறை ஏற்படுத்த வேண்டும். அவர்களைப் பெண் காவலர்கள் தான் பார்த்துக் கொள்ளவேண்டும்.
2. காவல் துறையினர் கைது செய்யப் பட்டவர்களிடம் காரணத்தையும், ஜாமீனுக்கு மனுபோட உரிமையுண்டு என்பதையும் சொல்ல வேண்டும்.
3. காவல் துறையினர் கைது செய்தவுடன் அருகிலுள்ள சட்ட உதவிக் குழுவுக்குத் தகவல் தரவேண்டும். குழு அரசு செலவில் தாமதமில்லாமல் சட்ட உதவியைத் தரவேண்டும். இதற்கான நிதியை மாநில அரசு முன் கூட்டியே குழுவுக்கு வழங்க வேண்டும். ▶
4. கைது செய்தவுடன் கைதி விரும்பும் நபரின் முகவரி பெற்று அவரிடம் கைதிபற்றித் தெரிவிக்கவேண்டும்.
5. நீதி மன்றத்திற்கு முன் கைதி நிறுத்தப்படும் போது அவர் துன்பப்படுத்தப்பட்டாரா என நீதிபதி கைதியிடம் விசாரிக்க வேண்டும்.

1983 பிப்ரவரி 15ல் அளிக்கப்பட்டது இத்தீர்ப்பு. இதனை அமுல் படுத்த தமிழக அரசை தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. அரசு இதுபோன்ற விவகாரத்தில் செவிடன் போல் பாசாங்கு செய்வதுதானே மாமூல்.

## திருடர்கள் நடத்திய கூட்டம்

பிக்பாக்கெட் திருடர்கள் ஒன்று சேர்ந்து ஹைதராபாத்தில் பத்திரிகையாளர்கள் கூட்டம் ஒன்று நடத்தினார்கள். அப்போது திருடர்கள் தங்கள் குறைகளை மனந்திறந்து கூறினார்கள்.

திருட்டுத் தொழிலை விட்டு விட்டு திருந்தி வாழலாம் என்றால் போலீஸ்காரர்களே எங்களை நல்லவர்களாக வாழ விடமாட்டேன் என்கிறார்கள், திருடி வாழ்ந்த போது போலீஸ்காரர்கள் எங்களை கைது செய்யாமல் இருக்க பணம் கொடுத்து வந்தோம். திருந்திய பின்னும் அவர்கள் இன்னும் அதிகமாகப் பணம் கேட்கிறார்கள். நாங்கள் எங்கே போவோம் போலீஸ்காரர்களுக்காக மறுபடி திருட வேண்டியிருக்கிறது.

இவர்களுடைய குறையைக் கேட்ட ஹைதராபாத் மாநகரப் போலீஸ் துறை போலீஸ்காரர்களிடம் இருந்து மனந்திருந்திய திருடர்களைக் காப்பாற்ற ஒரு குழுவை ஏற்படுத்தியிருக்கிறது.

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

# அறிவு வழி

பகுத்தறிவு இயக்கத்தில் தன் மனதைப் பறி கொடுத்த பார்ப்பன இளைஞர் ஜோதி சங்கர் என்பவரால் 1975 அக்டோபரில் தொடங்கப் பட்டது, "அறிவு வழி".

பின்னர் 1976 ஜனவரியில் பகுத்தறிவு சமதர்ம இயக்கத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட, முன்னாள் பி அண்டு சி மில் தொழிலாளர் திரு. கே. பஞ்சாட்சரத்தின் ஆசிரியராகக் கொண்டு இன்று வரை வெளி வந்து கொண்டிருக்கிறது.

"துக்ளக்" அளவில் வெளி வரும் அறிவு வழி வெறும் 1000 பிரதிகளே அச்சடிக்கப் பட்டாலும் இதன் வாசகர்கள் கொள்கைப் பற்று மிக்கவர்கள். பெரும்பாலும் "தமிழ்நாடு பகுத்தறிவு சமதர்ம இயக்க" உறுப்பினர்களுக்காகவே இது நடத்தப்படுகிறது. இவ்வியக்கத்தின் தற்போதைய தலைவர் திரு. குசேலர் இதழின் சிறப்பாசிரியர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு.

இதன் வாசகர்கள் இதழ் வேறு இயக்கம் வேறு என்று கருதுவதில்லை. இதன் நோக்கம் "சாதி, மத, இன, நிற, மொழி வேற்றுமையற்றதும், பொருளாதார ஏற்றத் தாழ்வற்றதும், பெண்ணடிமையற்றதுமான நாத்திகப் பொதுவுடமை அரசையும், சமுதாயத்தையும் இந்தியாவில் பார்லிமென்டரி கட்சி அரசியல் சார்பற்ற முறையில் நிறுவப்பாடுபடுவது".

அரும்பாக்கத்தில் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலைக்கருகே இன்றைக்கோ, நாளைக்கோ தலையில் இடிந்து விழக் கூடிய ஒரு பாழடைந்த வீட்டிலிருந்து தான் "அறிவு வழி" வெளிவருகிறது.

கடுமையான பொருளாதார வசதியின்மையுடன் ஒவ்வொரு மாதமும் "அறிவு வழி" மல்யுத்தம் நடத்தினாலும் 94 மாதங்களாக ஓரிதழ் கூட நிற்காமல் மாதத்தின் முதல் தேதியன்றே வெளிவரும் வைராக்கியம் குறிப்பிடத் தக்கது.

தனது கொள்கை இயககச் செய்திகளைத் தவிர ▶ பரந்த கண்ணோட்டத்தோடு, இன்றும் பல புதிய வாசகர்களைக் கவரும் வண்ணம், நிறைய சமுகப் பிரச்சனைகளை இவ்விதழ் அலசி ஆராய முற்படுவதில்லை. இன்னும் நிறைய பேரை எட்ட 'அறிவு வழி' இதனைச் சிந்தித்தாக வேண்டும்.

— [illegible]

முகவரி : 500, பெரியார் ஈ. வெ. ரா. நெடுஞ்சாலை அரும்பாக்கம், சென்னை-600106; ஆண்டுச் சந்தா ரூ 10.00 தனியிதழ் : ரூ 1.00

(இத்தொடரில் பிற பத்திரிகை விமர்சனங்கள் கொஞ்சம் இடை வெளிக்குப் பின்னர் தொடரும்.)

# எமக்கு வந்தவை

**பேசத் தெரிந்த ஊமைகள் :** (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: அசோகஜெயன், 84, காஞ்சிரவிளை வீடு, புதுக்கோட்டை.629171. விலை: ரூ 5.00

**பயணம் :** (கவிதைத் தொகுப்பு) ஆசிரியர்: பறம்பை பரணி, வெளியீடு: புதுமைப் பதிப்பகம், 5-97, முத்தாலம்மன் கோவில் தெரு, பரமக்குடி.623707. விலை: ரூ 2.00

**இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக்குரல் :**
தொகுப்பாசிரியர்கள்: வே. மு. பொதியவெற்பன், மா. வளவன், இணை வெளியீடு: சிலிக்குயில்-குடந்தை; பாவல் பதிப்பகம் அல்லிநகரம், கிடைக்குமிடம்: வே. மு. பொதியவெற்பன், 20, கோதண்டபாணித் தெரு, குடந்தை.612001 (அல்லது) பொன் விஜயன், தெற்குத்தெரு, அல்லிநகரம் (தேனி).626531. விலை: ரூ 3.00

**பாரதி பாடற் பகுப்பு :** (பாரதி கவிதை ஆய்வு நூல்)
ஆசிரியர்: டாக்டர் அ. கேசவ மூர்த்தி எம் ஏ.,பி.எச்டி. கிடைக்குமிடம்: முக்கனிப் பதிப்பகம், 6பி, வீடுகட்டும் சங்கக் குடியிருப்பு, சிவகாசி மேற்கு.626124 விலை: ரூ 9.00

**உச்ச நீதிமன்றத்தின் முற்போக்குத் தீர்ப்புகள் :**
தமிழாக்கம்: பால்பாஸ்கர் வெளியீடு: 'சோகோ' அறக்கட்டளை 64, லிக் காலனி, கே. கே. நகர், மதுரை.625020 விலை ரூ 10.00

**சின்னச் சின்னப் பூக்களுக்கு வண்ண வண்ண பாக்கள் :**
(கவிதைத் தொகுப்பு) ஆசிரியர்: கவிஞர் தேனிமுருகேசன் வெளியீடு: தேனி இலக்கியப் பணிமன்றம், கிடைக்குமிடம்: கவிஞர் தேனிமுருகேசன், 185, பழைய டி.வி.எஸ். தெரு, தேனி.626531 விலை போடவில்லை.

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

# வாசகர் குமுறல்

## புதுக்கோட்டை பேருந்து நிலைய சைக்கிள் ஸ்டாண்டு

☐ கடந்த ஓராண்டுக்கும் மேலாக புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டாண்ட் செயல் படுகிறது. தற்காலிகமாக போடப்பட்ட கீற்றுக்கொட்டகை மாற்றப்படவில்லை. சைக்கிள்கள் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக வருவதால் நிறுத்தஇடமின்றி வெயிலில் நிறுத்தப்படுகின்றன. இடைவெளி இல்லாமல் நிறுத்தப்படுவதால் சைக்கிள்கள் எடுப்பது வைப்பது கடினமாக இருப்பதுடன் பழுதடைகின்றன. போதாகுறைக்கு சீட்டு, மணி, டைனமோ தினமும் திருட்டுப் போகின்றன. மதியம் 12க்குள் சைக்கிள் எடுத்தால் ஒரு நாள் வாடகை. இரவு 12மணிக்குப் பின்பு ஒரு நாள் வாடகை அதிகம். இதைப் பற்றி கேட்டால் காண்ட்ராக்டர்கள் முனிசிபாலிட்டியையும், அதிகாரிகள் காண்ட்ராக்டர்களையும் குறை சொல்கின்றனர். நாம் சைக்கிள் எடுக்க படும் வேதனையை காண்ட்ராக்டரின் ஆட்கள் மகா ராஜாக்கள் போல் ரேடியோ கேட்டுக் கொண்டு கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு புன்னகை பூத்த வண்ணம் கண்டு கொண்டு வாளாவிருப்பது நம் மனதை நோக வைக்கிறது.

—G. வெங்கடேஸ்வரன், புதுக்கோட்டை

## தொழிற்பயிற்சி விண்ணப்பம்

☐ அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆகஸ்ட் திங்கள் முதல் துவங்கும் தொழிற்பயிற்சிக்குப் பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுக்க விண்ணப்ப பாரம் ஜுலை மாதம் வழங்கப்பட்டது. அப்போது அதன் விலை ரூ3. அதாவது நாம் ரூ3க்கான இந்திய அஞ்சல் ஆணையை அனுப்ப வேண்டும். ஜுன் 29ம் தேதி பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப் பட்டன. தேர்வு பெற்ற மாணவர்கள் இந்நிலையத்தில் சேர ஆவலுடன் இந்திய அஞ்சல் ஆணையைச் சிரமப்பட்டு பெற்று விண்ணப்ப பாரம் பெற வந்தால் பாரத்தின் விலை திடீரென ரூ4க்கு உயர்ந்து விட்டது. அதாவது அஞ்சல் ஆணையை கொடுத்து ரூ 1 கூடுதலாக கொடுக்க வேண்டுமாம். விண்ணப்ப பாரம் நிலையத்திடம் தீர்ந்து விட்டது இனிமேல் தான் வர வேண்டும் என்று கூறிக் கொண்டே ரூ4 ஐப் பெற்றுக் கொண்டு வழக்கம் போல வழக்கமான இடத்தில் விண்ணப்ப பாரம் கொடுக்கிறார்கள். இப்படி விலையேற்றி விற்பது அந்த நிலையத்தின் முதல்வருக்கே தெரியுமாம். அவரே அதைக்கண்டும் காணாமற் போல இருந்தால் எப்படி?

—B. வெங்கடேஸ்வரன், கருக்கு அம்பத்தூர்

## கழிப்பறையற்ற இராமேசுவரம்

☐ இராமேசுவரம் பல்லாயிரக்கணக்கான வெளி நாட்டினரும் வெளி மாநிலத்தினரும் வந்து செல்லுகின்ற ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடம். ஆனால் இங்குப் பொதுக் கழிப்பிடமோ, பொதுக் குளியல் அறையோ எதுவுமில்லை.

மக்களிடமிருந்து வரிகள் வசூல் செய்வதில். மட்டும் அக்கறை கொண்ட நகரியம் யாராவது அமைச்சர்கள் வந்தால் சில முக்கியமான இடங்களில் கீற்றாலான கழிப்பறையைக் கட்டுவது, அவர்கள் சென்றவுடன் பிரிப்பது என்பது வாடிக்கையான ஒரு செயல். அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால் நகரில் பல இடங்களில் வளைவுகள் வைக்கும் நகரியம் இதைக் கவனிக்குமா?

—C. திருவாசகம், நகர் திராவிடர் கழக செயலர், இராமேசுவரம

## பார்க்க முடியா அடையார் ஆலமரம்

☐ அடையாறில் இருக்கும் உலகப் புகழ் மிகுந்த ஆலமரத்தைப் பார்க்க தினமும் நூற்றுக்கணக்கானோர் வருவதைக் காண்கிறோம். அந்த ஆலமரத்தை கண்காணித்து வரும் பிரம்மஞான சபையினர் (Theosophical Society) அதைக் காண்பதற்கு நேரம் வகுத்துள்ளனர். காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 2 மணி முதல் 4 மணி வரையிலும் மட்டுமே. இதனால் அவசரமாக வெளியூர் செல்பவர்கள் இத்தப் புராதன அதிசய மரத்தைப் பார்க்க முடியாமல் ஏமாந்து செல்கிறார்கள். சம்மந்தப்பட்டவர்கள் இந்த அவல நிலையை மாற்றி காலை முதல் மாலை வரையிலும் தொடர்ந்து பார்க்க "ஷிப்ட்" முறையில் பணி செய்ய ஏற்பாடு செய்தால் மிகவும் பயனாக இருக்கும்.

—இரா. சத்திய நாராயணன், குரோம்பேட்டை, அஸ்தினாபுரம்

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

திரையுலக பிரமுகர்கள்

1

# நடிகர் எம்.ஜி.ஆர்

1931-இல் தமிழில் முதல் பேசும் படம் வெளி வந்தது. அன்றிலிருந்து கடந்த 52 ஆண்டுகளில், சினிமா என்கிற கலை சாதனத்தை தன் சுய வளர்ச்சிக்கு மிகவும் தந்திரமாக பயன்படுத்திய நபர்களில் தலை சிறந்தவர் எம்.ஜி.ஆர் உலக வரலாற்றில் சினிமாவை இப்படிப் பயன்படுத்தி, அரசியலின் மிக உயர்ந்த இடத்தைப் பிடித்த நபர் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை.

எம்.ஜி.ஆரின் சினிமா உலக வரலாறு 1936-இல் வெளியான சதிலீலாவதியில் தொடங்கி 1978-இல் வெளியான அவரது 136-வது படமான மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனில் முடிகிறது.



1936 : சதிலீலாவதி

எம்.ஜி.ஆரின் படங்களுக்குள் புகுந்து அவற்றின் படிப்படியான பாதிப்புகளை ஆராயும் முன் அவரது திரையுலக வரலாற்றைச் சுருக்கமாக திரும்பிப் பார்ப்பது அவசியமாகிறது :

3-வது வகுப்பு படித்துவிட்டு வறுமையோடு போராடிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர், கலைத் துறைக்கு தனது 8-வது வயதிலேயே நுழைந்தது, பிழைப்புக்கு வேறு வழியில்லை என்ற நிலையில் தான் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் வாரம் 4 அணா சம்பளத்தில் நீண்ட காலம் நடிகர் பட்டாளத்தில் ஒருவராக துணை நடிகர் தொழிலில் வாழ்ந்திருக்கிறார். எம்.ஜி.ஆர்.

சரியாக மீசை முளைக்காத 19-வது வயதில் அவரது முதல் திரை பிரவேசம் ஏற்பட்டது. கதாநாயகனாக அல்ல சில விநாடிகள் வந்து போகும் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேடம். அந்த முதல் படம் 1936-இல் வெளி வந்த சதிலீலாவதி. 100 ரு சன்மானம் கிடைத்த இந்த எக்ஸ்ட்ரா வேடத்தை வாங்கித்தந்தவர் சிரிப்பு நடிகர் காளி என் ரத்தினம் இப்படத்தின் தயாரிப்பாளர் பிரபல நடிகர் எம். கே. ராதாவின் தந்தை கந்தசாமி முதலியார்.

தொடர்ந்து சமூகப் படங்களில் தான் நடிப்பது என்ற முடிவோடு சான்ஸ் தேடி அலைந்த போது இரு சகோதரர்கள், வீரஜகதீஷ் என்ற இரு படங்களில் சின்ன வேஷங்களே கிடைத்தன. எனவே அந்த முடிவை மாற்றினாலன்றி திரையுலகில் குப்பை கொட்ட முடியாது என்று புரிந்து கொண்டு புராணப்பட வாய்ப்புகளுக்குத் தாவினார்

தட்சயக்ஞம், பிரகலாதா, சாலிவாகனம், வால்மீகி, ஸ்ரீ முருகன், அபிமன்யூ என்று புராணப் படங்களில் சில துணைப் பாத்திர வாய்ப்புகள் கிடைத்தன. சுமார் 10 ஆண்டுகள் சரியான வாய்ப்பில்லாத, உப நடிகராக கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தார்.

16 ஆண்டு கால திரையுலக அனுபவத்திற்கு பின் முதல் முதலாக 1947-இல் தான் எம்.ஜி.ஆருக்கு கதாநாயகன் வேடம் (வயது 31) கிடைத்தது. நடிப்புக் கூலி ரு 2500 பெற்ற அந்தப் படம் தான் இராஜகுமாரி. தொடர்ந்து 1948-இல் 'மோகினி' படத்தில் கதாநாயகன் வேடம்.

இந்தக் காலக் கட்டத்தில், எம்.ஜி.ஆர். கதர் சட்டை போட்ட காங்கிரஸ் காரராக இருந்தார். ஆனால் அவர் சமகாலத்தில் வாழ்ந்த நாடக, திரை கலைஞர்கள் போல எந்த தேசிய இயக்கங்களிலும் செயலளவில் தீவிர பங்கு கொள்ளவில்லை.

கதர்ச் சட்டை, உத்திராட்சை மாலை, விபூதிப்பட்டை, குங்குமப்பொட்டு இவற்றுடன் தான் இவர் முதன் முதலில் திரு. அண்ணாதுரையைச் சந்தித்திருக்கிறார். அண்ணாவின் நாடகத்தில் வாய்ப்புப் பெற ஒரு நண்பருடன் சென்றார். வாய்ப்பும் கிடைத்தது.

இந்தப் புதிய தொடர்பால் 1950-இல் கருணாநிதி வசனம் எழுதிய மந்திரிகுமாரி படத்தில் கதாநாயகன் வேடம் கிடைத்தது. எனினும் இப்படத்தில் நடித்த எஸ் ஏ. நடராஜன் என்ற நடிகரே படம் பார்த்த ரசிகரிடையே பாராட்டைப் பெற்றார். எம்.ஜி.ஆரின் கதாநாயகச் சிறப்பைத் திரும்பிக் கொண்டு வர கருணாநிதி வசனம் எழுதி வெளிக் கொணர்ந்த படம் அடுத்து வந்த 'மருத நாட்டு இளவரசி'. இப்படத்தில் கருணாநிதி எம்.ஜி.ஆர்

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010

சகோதரர் சக்கரபாணி முதலியோர் கூட்டு தயாரிப்பாளர்கள்.

தொடர்ந்து அவர் 1952-53-இல் நடித்து வெளி வந்த அந்தமான் கைதி, என் தங்கை, குமாரி, ஜெனோவா போன்ற படங்கள் தோல்விக்குமேல் தோல்வியைச் சந்தித்தன.

அதே நேரத்தில் தி.மு.க. வில் இருந்து கொண்டு கருணாநிதியின் அடுக்கு மொழி வசனங்களை அழகாகப் பேசி புதிய பரபரப்பை சிவாஜி கணேசன் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

கழகக் கொடியின் கீழ், கருணாநிதியின் வசனத்தைப் பேசி நடித்தால் தனது திரையுலக அந்தஸ்த்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற நிச்சயமான நம்பிக்கையோடு எம். ஜி. ஆர். தி. மு. கழகத்தில் ஞானஸ்நானம் பெற்றார் புதிய மார்க்கெட்டைத் தேடி!

அவரது அதிஷ்டம் கழகக் கலைஞர் சிவாஜி கணேசன் அப்போதுதான் திருப்பதிக்குப் போய் சாமி கும்பிட்டு, விவகாரத்தில் மாட்டிக் கொண்டு 'திருப்பதி கணேசா, திரும்பிப் பார்' என்று கழகத்தவரிடம் கெட்ட பெயர் வாங்கிக்கொண்டிருந்தார். மெள்ள மெள்ள கழகத்தை விட்டு கணேசன் விலகிக்கொள்ள, அந்த இடத்தை எம்.ஜி.ஆர். திறமையாக பிடித்துக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து கலைஞர் வசனத்தில் 1954 இல் வெளிவந்த மலைக்கள்ளன், 1955இல் வந்த குலேபகாவலி 1956இல் வந்த அலிபாபாவும் 40 திருடர்களும், மதுரை வீரன் ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர். கதாநாயகனாகத் தோன்றினார். எல்லாம் மாபெரும் வெற்றிப்படங்கள்.



எல்லாம் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாக ஏழைகளின் தோழனாய், எத்தர்களின் எதிரியாய், மக்கள் மனதில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் எழுச்சியும் தரக்கூடிய பாத்திரங்கள்.

1954க்குப் பிறகு வந்த இந்த வெற்றிப் படங்களுக்கு மக்கள் காட்டியபேராதரவை எம்.ஜி.ஆர் கணிக்கிறார். ஆழ்ந்து கவனிக்கிறார். இந்த மக்களை மெய்சிலிர்க்க வைக்கும் சரியான உத்தி புரிகிறது. கொஞ்சம் காதல், கொஞ்சம் செக்ஸ், கொஞ்சம் வசனம், நிறைய வீரசாகஸம் இந்த புதிய சூத்திரம் உருவாகிறது. இதற்குப்பின் வந்த படங்கள் எல்லாமே கிட்டத்தட்ட இதே பாணியில் இந்த சூத்திரத்துக்குள் அமைக்கப்படுகிறது.

தி.மு.க. இந்தக்காலக்கட்டத்தில் தான் தேர்தலில் போட்டியிட முடிவெடுக்கிறது. எம்.ஜி ஆரின் திரையுலக வெற்றி கழகத்திற்கு மாபெரும் தேர்தல் கவர்ச்சியாகத் தோன்றுகிறது. (தொடரும்)



சுட்டி ஒவ்வொரு மாதமும் **முதல் தேதி** வெளிவரும்.
12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00
தனிப்பிரதி 50 காசு
எல்லாத் தொடர்புகளுக்கும் :—
ஆசிரியர் குழு, **'சுட்டி'**
1494, அண்ணா நகர், சென்னை-600 040.

**சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா?** இதழ் எண்கள் 1 முதல் 7, 21, 22, தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால், எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டியை இலவசமாக அறிமுகப்படுத்துங்கள்:**
நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியை வரவேற்கக்கூடியவர் என்று நீங்கள் நினைக்கும் நண்பர்களின் முகவரியை அனுப்புங்கள். எவ்வளவு முகவரி அனுப்பவும் தடையில்லை. முற்றிலும் இலவசமாக மாதிரி இதழ் ஒன்று அவர்களுக்கு அனுப்பப்படும்.

**சுட்டி விற்பனையாளர்கள் :—** சுட்டி விற்பனையாகாத எல்லா நகரங்களிலும், ஊர்களிலும், கிராமங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள், தரமான கமிஷன். சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமை உண்டு.


FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010



ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 1494, அண்ணா நகர், சென்னை-40.
அச்சிடுவோர்: J. S. கிட்ராஜ் ஷா., இருஷா பிரிண்டர்ஸ், 35, லப்பை தெரு, சென்னை-600 002.

FREE E BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010


# டெலிவிஷனில் மிகச் சிறந்தது

# சாலிடர்

அதன் ஏஜெண்ட்ஸ்:

## ZENITH ELECTRONICS

(கபாலீஸ்வரர் பெரிய கோபுர வாசல்)


மைலாப்பூர், சென்னை-4,

மிக நம்பகமானவர்கள்.

DIAL 76676, MADRAS.

[illegible] மாத இதழ் 1, ஆகஸ்டு 1983 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment License No. TN/MS(N)WPP-56

1892 / Dec 2010
http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)





# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary. secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro grammes (I) Sakthi High Sehool Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Techno logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E-BOOKS - www.thamizham.net - TM1892 / Dec 2010